ஆண்டு பட்டிகை வழக்கு எண்.196/2025

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 196/2025 | LW- 5 | PW- 4 |

| | |
|---|---|
| Name | : பிரபு ( பார்வை மகஜர் சாட்சி) |
| Father's/Husband's Name | : பூமிநாதன் |
| Village | : விளாம்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 40/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of March 2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து யூனியன் அலுவலகத்தில் ஒப்பந்ததாரராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை நான் பார்த்ததில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. சுமார் 5, 6 மாதங்களுக்கு முன்பாக ஒரு நாள் விளாம்பட்டி விளக்கில் வைத்து போலீசார் விபத்து சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள். பின்னர் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து விசாரணை செய்தபோது சாட்சியாக கையொப்பம் கேட்டதன் பேரில் நான் கையொப்பம் செய்தேன். **(பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2) நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதி இருந்தது என்ற விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விளாம்பட்டி பிரிவில் சாலையை ஒட்டி வடக்கு பக்கம் 3, 4 வீடுகள் உள்ளது என்றால் சரிதான். தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி விளாம்பட்டி பிரிவு அருகே பாஸ்ட் புட் உணவகம் உள்ளது என்றால் சரிதான். ரோட்டின் மேற்கு பக்கம் மில் உள்ளது. தெற்கு பக்கம் பேக்கரி உள்ளது. தேசிய நெடுஞ்சாலையில் விளாம்பட்டி பிரிவிற்கு என்று கிழக்கிலிருந்து மேற்கே செல்வதற்கு பிரிவு ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரிதான். விளாம்பட்டி பிரிவில் 30, 40 அடி தாண்டி உள்ள சென்டர் மீடியனை திருமண விழாவிற்காக உடைத்துவிட்டார்கள் என்றால் சரிதான். விளாம்பட்டி பிரிவு அருகே பொதுமக்களால் உடைக்கப்பட்ட பகுதியில் கிழக்கிலிருந்து மேற்கே செல்வதற்கு பேரிக்காடோ, சிக்னலோ வைக்கவில்லை என்றால் சரிதான். விளாம்பட்டி பிரிவிலிருந்து தெற்கு நோக்கி போகும்போது சென்டர் மீடியன் உடைக்கப்பட்ட பகுதியில் எந்தவித சிக்னலும் இன்றி திடீரென கிழக்கிலிருந்து மேற்கே குறுக்காக வாகனத்தில் செல்வது தவறு என்றால் சரிதான்.

**மறு விசாரணை : இல்லை.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.24 13:05:18 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்